Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50


# உதயன்

சுடர் : 38
கதிர் : 126

சனிக்கிழமை 01 ஏப்ரல் 2023

பங்குனி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



“மோதகமும் கொழுக்கட்டையும் மாதிரி உந்தச் சட்டமெல்லாம் பேர் மட்டும் தான் வேற, உள்ளுக்க எல்லாம் ஒண்டுதான் பாருங்கோ”

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்ற ஒருபோதும் விடோம்!

## தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

**கொழும்பு, ஏப்ரல் 1**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மோசமானது. அதை எக்காரணம் கொண்டும் நிறைவேற்றவிட மாட்டோம் - என்று தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு சூளுரைத்துள்ளது.** »11

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்., ஏப். 1
யர்ழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற »11

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## 100 மடங்கு ஆபத்தானது!

கொழும்பு, ஏப். 1
அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், தற்போதுள்ள சட்டத்தைவிட 100 மடங்கு ஆபத்தானது. அதனைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று »12

## கட்டம் கட்டமாகவேனும் தேர்தலை நடத்துங்கள்!

### மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து

கொழும்பு, ஏப். 1
தேர்தல் இல்லை என்பது ஜனநாயகம் இல்லை என்பதையே குறிக்கும். எனவே நிதி நெருக்கடி தொடர்ந்தும் காணப்படுமானால் அதனை »11

வெடுக்குநாறிமலை ஆலய உடைப்பு

## ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைப்பு

வவுனியா, ஏப். 1
வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் »11

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## ஏப்ரல் மத்தியில் நாடாளுமன்றில்!

கொழும்பு, ஏப். 1
புதிய பயங்கரவாதத் தடைச்சட்ட வரைவானது ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று »12



## சாரா இறந்துவிட்டாரா? ஒருபோதும் நம்பமுடியாது

### முஜிபுர் ரஹ்மான் வெளிப்படை

கொழும்பு, ஏப். 1
எனக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படுமானால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான உண்மைகளை »11

பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக

## சங்கானையில் இன்று உரிமைப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1
தமிழர் தேசத்தின் ஆன்மாவைச் சிதைத்தழிக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக, சங்கானை சந்தைக்கு முன்பாக இன்று காலை 9.30 மணிக்கு அறவழியில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள் »11



வவுனியாவில்

## 10 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

### 4 வருடங்களாகத் தொடர்ந்த கொடுமை

வவுனியா, ஏப். 1
வவுனியாவில் 10 வயதுச் சிறுமியொருவரை கடந்த 4 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில், சிறுமி »11

## கூகுளுடைய தவறால் நேற்று பாதாளத்தில் வீழ்ந்த டொலர்

### ரூபாவின் போலி உயர்வால் பங்குச்சந்தையில் பதற்றம்

கொழும்பு, ஏப். 1
டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று சுமார் 100 ரூபா வரையில் சடுதியாக »10

## 12,700 கடலட்டைகளுடன் மன்னாரில் மூவர் கைது!

மன்னார், ஏப். 1
அனுமதிப்பத்திரமின்றி பிடிக்கப்பட்ட 12 ஆயிரத்து 700 கடலட்டைகளுடன் மன்னாரில் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். »12

## கரம்பகம் பகுதியில் ஒருவர் வெட்டிக்கொலை

### மகன்கள் உட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 1
யாழ்ப்பாணம், மிருசுவில் - கரம்பகம் பகுதியில் தோட்டக் காணியொன்றில் வசித்துவந்த நபரொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தப் படுகொலை தொடர்பில் இறந்தவரின் மகன்கள் உள்ளிட்ட மூவர் கைது »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேறிகளால் சூழ்கின்றது நாடு!

## மருத்துவ நிபுணர் ஷெரின் தகவல்

**கொழும்பு, ஏப். 1**

**நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு மூன்று பேரில் ஒருவர் சோம்பேறியாக அடையாளம் காணப்படுகின்றனர்.**

தொற்றாநோயற்ற சுகாதார இயக்குநரகத்தின் சமூக மருத்துவ நிபுணர் மருத்துவர் ஷெரின் பாலசிங்கம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மடிக்கணினி பாவனை, தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம், கைத்தொலைபேசிக்கு அடிமையாதல், நடைப்பயிற்சி இன்மை போன்ற காரணங்களால் உடல் அசைவு இன்றி இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இதயநோய், நீரிழிவு, குருதி அழுத்தம் போன்றவை தாக்கும் அபாயம் நேரிடும்.

இந்த மாதம் உடல் அசைவு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாநோயற்ற சுகாதார அலுவலகம் இந்த நிகழ்ச்சி நிரலில் நிறுவன மட்டத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் தினமும் உடற்பயிற்சி செய்ய ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதன் மூலம் பல நோய்களை தடுக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



# தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்ததினம் பல்வேறு இடங்களில் நேற்று வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகாமையிலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் 125 ஆவது பிறந்ததினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சி.வி.கே சிவஞானம் உள்ளிட்டோரும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள அவரது நினைவுத்தூபியிலும் தந்தை செல்வாவின் பிறந்ததினம் கடைப்பிடிக்கப்பட்டது. (ஓ-14-110-20)

# கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் புதிய சட்டத்தை நிராகரியுங்கள்

## ரெலோ பேச்சாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.1

கடுமையானதும் கொடுமையானதுமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இந்த அபாயகரமான சட்டவரைவை அரசியல் கட்சிகள் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ரெலோ ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டவரைவை நாங்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். அதற்கு கடுமையான எதிர்ப்பையும் பதிவுசெய்கிறோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களிடம் கூறிக்கொண்டு மறுபுறம் அதையும் விட கொடுமையான சட்டத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தை மறுதலிக்கும் வகையிலும் போராட்டங்களில் ஈடுபடுவதையும் இந்தச் சட்டவரைவு கட்டுப்படுத்துகிறது. இது நிராகரிக்கப்பட வேண்டியதொன்று.

குறித்த சட்டவரைவை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும் - என்றார். (ச)

# ஐ.எம்.எப். திட்டத்திலிருந்து மக்கள் பாதுகாக்கப்படுவர்

## இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் ஊடாக மக்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு வலைப் பின்னல்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் அங்கீகாரம் குறித்து இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தெளிவு படுத்தும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடலில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிக்கையில்;

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த காலத்தில் குறிப்பிடத்தக்க வெளிநிதி இடைவெளியை நாம் சந்தித்துள்ளோம்.

இந்த நிதி இடைவெளியை புதிய வெளிநாட்டு நிதி மற்றும் வெளிநாட்டு கடன் சேவை நிவாரணம் மூலம் ஈடுசெய்யவேண்டும்.

கடனை திருப்பிச் செலுத்தும் திறன் மேலும் சிதைவதை தவிர்ப்பதற்காக நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்படவேண்டும்.

அதேவேளை பணப்புழக்க நிவாரணத்தை இலக்காகக் கொண்ட உள்நாட்டு கடன் மேம்படுத்தல் நடவடிக்கைக்கான விருப்பங்களையும் ஆராய்ந்து வருகிறோம். அவை நடைமுறைப் படுத்தப்படும். அத்துடன் மக்களை பாதுகாக்கும் வகையில் சர்வதேச நாணய நிதிய கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டுத் தன்மையுடன் ஒத்துப்போகும் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை அடைய வழியேற்படுத்துவோம் - என்றார். (ச-இ)

# கஞ்சா கடத்தலுடன் தொடர்பு பொலிஸ் அலுவலருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப். 1

எழுதுமட்டுவாழில் கஞ்சாப் பொதி மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் அலுவலரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த 9ஆம் திகதி மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது எழுதுமட்டுவாழ் பகுதியில் 16 கிலோகிராம் கேரளக் கஞ்சாப் பொதியை கைவிட்டு இருவர் தப்பியோடினர்.

அவர்களின் மோட்டார் சைக்கிளை பொலிஸார் மீட்டபோது அந்த மோட்டார் சைக்கிள் மன்னார் சிலாவத்துறையில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸ் அலுவலர் சட்டத்தரணி ஊடாக நேற்றுமுன்தினம் நீதிமன்றில் சரணடைந்தார்.

கடத்தலுடன் தொடர்புடைய மற்றையவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். சரணடைந்த பொலிஸ் அலுவலரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்ற அனுமதியை பொலிஸார் கோரினர்.

அந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்று 14 நாள்கள் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ச)



# மாணவர்கள் மீது வன்முறை; குற்றவாளிகளைக் கைதுசெய்க

## கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி - சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் நுழைந்தவர்கள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் முன்பாகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிராமமட்ட அமைப்புக்கள், பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென்று நுழைந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர். தாக்குதலில் பாடசாலை மாணவர் அடங்கலாக ஐவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தநிலையில் இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து 'மாணவர்கள் மீதான வன்முறையை எதிர்க்கிறோம்', 'வாழக் கற்றுக்கொடுக்கும் பாடசாலையை மரணப் பொறியாக்காதீர்கள்' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விடயம் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுசென்ற நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழரின் மரபுரிமை அழிப்புக்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 1

தமிழரின் மரபு வழி அடையாளங்களின் அழிப்புக்கு எதிராக பல பகுதிகளிலும் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"பௌத்த பேரினவாதமே! தமிழரின் மரபுவழி அடையாளங்களை அழிப்பதை உடனே நிறுத்து" என்ற வாசகம் எழுதப்பட்டு சுவரொட்டியில் பொறிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களாக தமிழர்களின் இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டும் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் களவாடப்பட்டும் வருகின்றன. அதற்கு எதிராக பல இந்து அமைப்புகளும் தமிழ்க்கட்சிகளும் போராட்டங்கள் நடத்தி வருகின்றன. இந்த நிலையிலே அதற்கு எதிராக சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. (ஓ-14,66)

# தமிழ்ப் பண்பாட்டுப் படுகொலைக்கு தென்னிலங்கை ஓரணியில் திரள்வு!

## எதிர்க்க ஒன்றிணையவேண்டும் முன்னாள் எம்.பி. ஈ.சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப்.1**

**தமிழர்களின் சரித்திர இடங்களை அழிப்பதற்கு - வரலாறுகளை திரிபுபடுத்துவதற்கு அரசாங்கம் முதற்கொண்டு பெரும்பான்மையின மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு எமது உரிமையை திட்டமிட்டு அழிக்க பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர். இது தமிழ்ப் பண்பாட்டு இனப்படுகொலையே - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.**


வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழின் தொன்மப் பண்பாட்டை பறைசாற்றும் வழிபாட்டிட அழிப்புக்கள் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றன. இத்தகைய அழிப்புகளுக்கு பின் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் காணப்படுகிறது. பல்லாண்டு காலமாக வழிபட்டு வந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் இனந்தெரியாத விஷமிகளால் இடித்தழிக்கப்பட்டுள்ளது. மனித மாண்புக்கு இழுக்கை ஏற்படுத்துகிறது இந்தக் கொடுஞ்செயல். அத்துடன் குருந்தூர் மலையில் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி விகாரை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதியிடமோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சுக்கோ எவ்வித நடவடிக்கையும் இல்லை.

சைவசமயத்தவரின் கன்னியா ஊற்றை ஆக்கிரமித்து புதுவரை விலக்கணங்கள் கூறப்படுகிறன. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையில் சிங்களமொழியில் பெயர் பதாகை இடப்படுகிறது. இந்தத் தொடர் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளுக்கு மரபுரிமையை பாதுகாக்க வேண்டிய தொல்லியல் திணைக்களமும்துணைநிற்கின்றது. புத்தர் சிலையை அல்லது விகாரையை அமைத்துவிட்டு வரலாற்றைத் திரிபுபடுத்துவதற்கு தென்னிலங்கையர்கள் கட்சிபேதமின்றி ஒன்றிணைந்துள்ளனர். இத்தகைய செயற்பாடுகளால் எதிர்கால சந்ததியினருக்குத் தெளிவில்லாத வரலாறே சென்றடையும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை சிங்களமயமாக்கி இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற தோற்றத்தை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தவே சிங்களத் தலைவர்கள் முனைகின்றார்கள். எனவே இனிவரும்காலங்களில் இதுபோன்ற துர்ச்செயல்கள் இடம்பெறுவதை தடுக்க நாமும் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும் - என்றார். (ச-18)

# காரில் போதைப்பொருள் இளைஞர் கைதாகினார்!



யாழ்ப்பாணம், ஏப். 1

தொண்டைமானாறு இடைக்காட்டுப் பகுதியில் சொகுசுக் காரில் பெருந்தொகையான போதைப்பொருளை கடத்திச் சென்ற இளைஞர் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய தொண்டைமானாறு இடைக்காட்டு பகுதியில் இருந்து சுன்னாகத்துக்கு காரில் செல்லும்போது இளைஞர் கைது செய்யப்பட்டார். அத்துடன் இளைஞர் செலுத்தி வந்த சொகுசுக் காரும் 18 கிலோகிராம் போதைப்பொருளும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனையடுத்து இளைஞரை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக போதைப்பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (ஓ-14,26)

# தேர்தல்கள் நடத்த அரசு தயாரில்லை

## செஹான் சேமசிங்க வெளிப்படை

கொழும்பு, ஏப். 1

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுதான் தீர்மானிக்கவேண்டும். ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானிக்கவில்லை.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :

அரசாங்கம் தற்போது முன்னுரிமை கொடுப்பது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கே. முதலில் மக்களின் நெருக்கடிகள் தீர்க்கப்படவேண்டும். அதனை நாம் வேகமாகச் செய்து முடிக்கவேண்டும். எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை அரசு எடுக்கவில்லை. அதேவேளை உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுதான் தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ச-22)



# குடத்தனை கடற்கரையில் வைக்கப்பட்ட சிவலிங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.1

வடமராட்சி கிழக்கு, குடத்தனை கடற்கரையில் திடீரென சிவலிங்கம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை வைக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கத்தை அதே இடத்தில் வைத்து வழிபடுவதற்கு சைவமக்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர் என பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சிவலிங்கம் காணப்படும் இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் கடற்படை முகாம் ஒன்றும் காணப்படுகின்றது.

இதேவேளை அண்மையில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை, அங்கிருந்த விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டமை, பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலய விக்கிரகங்கள் சூறையாடப்பட்டுள்ளமை போன்றன இன ஒடுக்குமுறையின் பௌத்தமயமாக்கலின் அங்கமாகக் காணப்படுகின்றது.

**இவ்வாறு இந்துக்களின் ஆலயங்கள், ஆலய விக்கிரகங்கள் இடித்தழிக்கப்பட்டு வரும் நிலையில் திடீரென குடத்தனைக் கடற்கரையில், கடற்படை முகாமுக்கு அருகில் சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது.** (ஓ-14)

# பழமை வாய்ந்த வழிபாட்டு இடங்களின் விவரங்கள் இருந்தால் தெரியப்படுத்துக

## தெல்லிப்பழைப் பிரதேசசெயலகம் பொதுமக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 1

கீரிமலை புனிதப் பிரதேசத்தில் அல்லது அதற்கு அண்மையில் அமைந்துள்ள வழிபாட்டு இடங்கள் பற்றிய வரலாற்று விவரங்கள் மற்றும் அதனுடைய சட்ட உரித்து ஆவணங்கள் வைத்திருப்பவர்கள் பற்றிய விவரங்கள் இருந்தால் அல்லது இது தொடர்பான நபர்களின் விவரங்கள் தெரிந்திருந்தால் தமக்கு அறியத்தருமாறு தெல்லிப்பழைப் பிரதேசசெயலக நிர்வாகத்தினர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக கீரிமலை ஆதி சிவன் ஆலயம், கிருஷ்ணர் கோயில், சடையம்மா சமாதி, கதிரையாண்டவர் கோயில், உச்சிப் பிள்ளையார் கோயில் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ள வேண்டிய சில நிர்வாக ரீதியான நடவடிக்கைகளுக்குக் குறிப்பிட்ட விவரங்கள் மற்றும் சட்ட ரீதியான ஆவணங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால் மக்களின் ஒத்துழைப்புக் கோரப்படுகின்றது.

எனவே விவரங்கள் தெரிந்தால் மேலதிக தகவல்களுக்கு 0212241726 எனும் தொலைபேசி இலக்கத்துடனும், 0212241726 எனும் வட்ஸ் அப் இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும், valinorthdso@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விவரங்களை அனுப்பி வைக்க முடியும் எனவும் தெல்லிப்பழைப் பிரதேசசெயலக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிர்ப்பு; போர்க்களமாக மாறிய பிரான்ஸ்

**பாரிஸ், ஏப். 1**

**ஓய்வுபெறும் வயதை 62 இல் இருந்து 64 ஆக உயர்த்தும் பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் ஓய்வூதிய சீர்திருத்த திட்டத்துக்கு எதிராக அங்கு மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.**



பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் ஓய்வூதிய சீர்திருத்த திட்டத்துக்கு எதிராக அந்த நாட்டில் கடந்த 20 நாள்களாக தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று இரண்டாவது முறையாக பிரான்ஸ் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்ரோனுக்கு இந்தப் போராட்டம் பெரிய சவாலாக மாறியுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல், வன்முறையாக மாறியது. அதனையடுத்து நாடு முழுவதும் சுமார் 13 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணிக்காக நிறுத்தி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து பரிஸ் வீதிகளில் போராட்டக்காரர்கள் பேரணி செல்வதால் பதற்றமான சூழலே நிலவுகிறது.

இதேவேளை பிரான்ஸ் அதிபர் மக்ரோன் பிரதமர் எலிசபெத் போர்ன், அமைச்சர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் எலிசி அரண்மனையில் பேச்சு நடத்தியுள்ளார். அத்துடன் எதிர்வரும் 6ஆம் திகதி போராட்டக்காரர்களுடனும், எதிர்க்கட்சியினருடனும் பேச்சு நடத்த இருப்பதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. (ச-இ)

அமரர் சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி அவர்களின்
ஓராண்டு நினைவுப் பூக்கள்



மலர்வு 15.10.1947
உதிர்வு 12.04.2022

கச்சாய் வடக்கின் ஒளிக்கீற்றே
உறவுகளின் ஊன்று கோலே
சமூகத்தின் பெருந் தூணே
ஆலயங்களின் மணி விளக்கே
கல்வி நிலையங்களின் பொக்கிஷமே
சமூக அமைப்புகளின் அகல் விளக்கே
அயலவரின் அன்புச் சுடரே
பண்பின் சிகரமே அன்பின் உறைவிடமே
நீர் மறைந்து ஓராண்டு கழிந்தாலும்
உமது நற்பணிகள் மறையாது
காலம் உள்ளவரை உம் நினைவுப் பூக்கள்
அகிலமதில் மணம் பரப்பும்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி...! சாந்தி....! சாந்தி...!

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.
(CS 39568)(K-1)
உறவினர்கள்.

# இந்தியாவைச் சேர்ந்த அஜய் உலக வங்கித் தலைவரானார்

வொஷிங்டன், ஏப். 1

உலக வங்கித்தலைவர் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அஜய் பங்கா என்பவர் போட்டியின்றித் தேர்வாகியுள்ளார்.

உலக வங்கியின் தலைவர் பதவியில் உள்ள அமெரிக்கர் டேவிட் மால்பாஸ் ஜூன் மாதம் 30ஆம் திகதியிலிருந்து பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

அதனால் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது. உலக வங்கியில் பெருமளவு பங்குகளை அமெரிக்காவே கொண்டிருப்பதால் அந்த நாட்டினர்தான் தலைவர் பதவியை வகிக்க முடியும். இந்தப் பதவிக்கு இந்திய வம்சாவளியான அஜய் பங்காவின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் அறிவித்தார். இதற்கான வேட்பு மனுத்தாக்கல் அவகாசம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த நிலையில் உலக வங்கித் தலைவராக போட்டியின்றி அஜய் பங்கா தெரிவாகியுள்ளார்.

இந்தியாவில் புனேயில் பிறந்த அஜய் பங்கா அமெரிக்காவில் பல்வேறு நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

ஏற்கனவே மாஸ்டர்காட் நிறுவனத்தின் தலைவராக பொறுப்பு வகித்த அஜய் பங்கா தற்போது ஜெனரல் அட்லாண்டிக் நிறுவனத்தின் துணைத் தலைவராகப் பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (ச-இ)

# பாப்பரசருக்கு சுவாசத்தொற்று



உரோம், ஏப். 1

பாப்பரசர் பிரான்சிஸ் சுவாசத்தொற்று நோயால் பாதிக்கப்பட்டு ரோமிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ளார். 86 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த சில நாள்களாக சுவாசிப்பதில் சிரமத்தை எதிர் நோக்கி வந்தார். இந்தநிலையில் அவருக்கு மேற்கொண்ட சோதனைகளின் அடிப்படையில் அவருக்கு சுவாசப் பாதிப்பு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என வத்திக்கான் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# இன்றைய நாள்

## (ராசிபலன்)





**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.



**இடபம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச்சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.



**மிதுனம்** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.



**கடகம்** முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. செலவுகள் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு ஏற்படும்.



**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.



**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.



**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுகூலம் உண்டாகும்.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.



**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயல்படுவீர்கள்.



**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். காரியம் இழுபறியாகும். பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.



**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.



**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தொடர் போராட்டங்கள் தேவையே!

தமிழர் தாயகத்தின் எல்லையோரக் கிராமமான வெடுக்கு நாறிமலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித் தழிக்கப்பட்டமையைக் கண்டித்து முன்னெடுக்கப்பட்ட அற வழிப்போராட்டத்தில் சொல்லிக்கொள்ளத்தக்களவானோர் கலந்துகொண்டிருக்கின்றனர். அண்மைக்காலங்களில் முன் னெடுக்கப்படும் போராட்டங்களுடன் ஒப்பிடுகையில் இதில் கணிசமானோர் கலந்துகொண்டிருந்தனர். தமிழர் தாயகத்தில் கடந்த பத்தாண்டுகளில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் கரிநாள் பேரணி, பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை யிலான பேரணி, எழுக தமிழ் பேரணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரணி, மாணவி வித்தியாவுக்கு நீதிகோரி தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஒழுங்க மைப்பில் நடந்த பேரணி ஆகியவற்றில் கலந்துகொண்டவர் களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது வவுனியாப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை குறைவானதுதான். அரசியல் கட்சிகளும்சரி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும்சரி ஏனைய பொது அமைப்புக்களும் சரி தத்தமது அழைப்பில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆள்களைத் திரட்டும் அளவுக்கு ஏனைய தரப்புக்களால் அழைப்பு விடுத்து நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆள்களை அழைத்துச்செல்வதில் அக்கறை காண்பிப்பதில்லை. தத்தமது அரசியல் இலக்கில் வெற்றியடைவதில் மாத்திரமே அவர்கள் குறியாக இருக்கின்றார்கள். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய உடைப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் அறிக்கை விட்ட சமயத் தலைவர்கள் தொடங்கி பலரையும் வவுனியாப் போராட்டத்தில் காணக்கிடைக்கவில்லை. இது அவர்களின் சுயநலத்தையே காட்டுகிறது.

சிறிலங்காவின் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தால் கட் டமைக்கப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும் இன வழிப்பை தமிழர் தேசமாக ஒன்றிணைந்து – ஒன்றாக எதிர் கொள்ளவேண்டிய காலத்தில் இப்படிச் சுயநலமாக நடந்து கொள்வது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. மக்களை அணி திரட்டுவது என்பது முக்கியமானது. தற்போது போராட்டங் களுக்கான அழைப்புக்களை விடுவோர் வெறுமனே ஊடக அறிக்கைகளுடன் தமது கடமை முடிந்து விட்டதாகக் கருது கின்றனர். 2001 ஆம் ஆண்டு இராணுவ முற்றுகைக்குள் இருந்தபோது யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தால் பொங்கு தமிழ் எழுச்சிக்கான மக்கள் அணி திரட்டல் எவ்வாறு நடந்தது என்பதை போராட்டங்களின் ஏற்பாட்டாளர்கள் தெரிந்து கொள்வது அவசியம். கிராமம் கிராமமாகச் சென்று மக்க ளுக்கு போராட்டத்தின் முக்கியத்துவத்தை அறிவூட்டவேண் டும். ஒவ்வொருவரும் போராடவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கவேண்டும். வாழ்வாதாரத்துக்காக ஏங்கிக்கொண் டிருக்கும் மக்களிடம் இனவழிப்புக்கு எதிராக ஏன் அணிதிரள வேண்டும் என்பதை உணர்த்தவேண்டும். தமிழர் தேசத்தில் தமிழினமாக எமது இருப்பை நிலைநாட்ட போராட்டத்தைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதைப் புரியச்செய்ய வேண்டும். இவற்றைச் செய்யாமல் மக்களை அணி திரட்டா மல் தொடர் போராட்டங்களை முன்னெடுக்காமல் நிச்சயமாக சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கட்டமைக்கப்பட்ட இன வழிப்பை எதிர்த்துப் போரிட முடியாது.

தென்னிலங்கையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற அரகல யப் போராட்டம் எப்படி வளர்ச்சிபெற்றது? சரியாக ஓராண் டுக்கு முன்னர் இதேநாளில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மிரிஹான வீட்டுக்கு முன்னால் போராட்டம் நடைபெற்று அவரது வீடு தாக்கப்பட்டது. தொடர்ந்து பத்து நாள்களில் காலிமுகத்திடலில் தொடர் போராட்டத்துக்கான கொட்டகை அமைக்கப்பட்டது. போராட்டம் ஒன்றும் பஞ்சு மெத்தையில் இருந்து நடத்தப்படவில்லை. கடந்த ஆண்டு மே 9 ஆம் திகதி போராட்டக்களங்கள் மீது ஏவல்காரர்களான குண்டர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் பின்னர் போராட்டத்துக்கான மக்கள் ஆதரவு அலை அதிகரித்தது. காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 மாதங்க ளிலேயே நாட்டின் ஆட்சித் தலைவர் கோத்தாபய விரட்டிய டிக்கப்பட்டார். அந்த மூன்று மாத காலப் பகுதிக்குள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுசிறு போராட்டங்கள் இடம்பெற் றன. ஆட்சியாளர்களுக்கு எதிரான தீப்பொறியை அணைந்து விடாமல் போராட்டக்காரர்கள் பார்த்துக்கொண்டார்கள். அது ஒரு நாள் கொழுந்துவிட்டெரிந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத் தியது. அதுபோன்றே நாமும் வவுனியாவில் ஆரம்பித்துள்ள போராட்டத்தின் பொறியை அணையவிடாது தொடர் போராட்டங்கள் ஊடாக ஒருநாள் கொழுந்துவிட்டெரியச் செய்யவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

" தீங்கிழைத்தவன் தன் வசம் சிக்கியபோதிலும், அவனை மன் னிப்பவனே இறைவனுக்கு நெருக் கமாகிறான் " – சோக்கிரட்டீஸ்




# ஐ.எம்.எப். கடனுதவி சிக்கலுக்குத் தீர்வல்ல!

## மனித உரிமைகள் கண்காணிப்பக தெற்காசிய பணிப்பாளர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.1**

**சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கையை மேலும் மோச மான பொருளாதாரச் சிக்கலுக்குள் தள்ளக்கூடும். மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளாது சமூக பாதுகாப்பிலும் அரசாங்கம் அக் கறை செலுத்தவேண்டும் - இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டி யுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அடுத்த சில வருடங்களுக்கு வறிய மக்களின் வாழ்க்கையில் நேரடித் தாக்கத்தைச்செலுத் தும். சர்வதேச நாணய நிதியத்தின் கூற் றுப்படி 8 வீதமாக இருந்த வற் 12 வீதமாக அதிகரிக்கப்பட்டு பின்னர் 15 வீதமாக அதிக ரிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கான எரிபொருள் மற்றும் இதர கொடுப்பனவுகள் குறைக்கப்படவுள்ளன.
இதனால் பொதுத்துறை வீழ்ச்சியடையும். பொருள்களின் விலையும் அதிகரிக்கும். ஏற்கனவே பொருளாதாரச் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ள மக்கள் மேலும் மோசமாக பாதிக்கப்படுவர். மக்களில் அரைவாசிப்பேர் கடனுக்கே உணவுப் பொருள்களைக் கொள் வனவு செய்கின்றனர். இதனால் நாணயச் சுழற்சியை கணிப்பிட முடியாத நிலை காணப்படுகிறது. அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரத்தில் பரிசோதனைகளை மேற் கொள்ள இதுவல்ல தருணம். எதியோப்பியா போன்ற நாடுகள் ஐ.எம்.எப்.உதவி மூலம் படுகுழியில் வீழ்ந்துள்ளன. சமூக பாதுகாப் பிலும் அரசாங்கம் அக்கறை செலுத்தவேண் டும் - என்றார். (ச-6)

# ஐ.எம்.எப். கடன் திட்டத்தில் மனித உரிமையை பேணுக

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள் வெளிப்படைத்தன்மையுடனும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கடப்பாட்டை பின்பற்றியதாகவும் இருக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையிடம் கோரியுள்ளது.
இதுதொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை யின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் யாமினி மிஸ்ரா தெரிவிக்கையில்,
இலங்கைக்கான சர்வதேச நாணயநிதியத் தின் நிதி உதவி குறித்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச மன்னிப்புச்சபை யின் பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத் தின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.
நெருக்கடியான தருணங்களில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகளைப் பெற்ற நாடுகள் மனித உரிமைகளை பாது காக்கும் விதம் குறித்து சர்வதேச மன்னிப் புச்சபை கரிசனை கொண்டுள்ளது.
அந்தந்த நாடுகள் சமூக அரசியல் உரிமை கள் உட்பட மனித உரிமைகளுக்கு முன்னு ரிமையளித்தல் வேண்டும்.
அதற்கமைய இலங்கை அரசாங்கமும் சர்வ தேச மனித உரிமை சட்டங்களின் கீழேயே சர்வதேச நாணய நிதியம் தனது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவேண்டும்.
சர்வதேச நாணய நிதியத்தின் சகல செயற் பாடுகளும் வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்கள் அறிந்து கொள்ளத்தக்கதாக வும் இருக்கவேண்டும் - என்றார். (ச-6)

**நாளை** 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை பங்குனி 19


சுபநேரம் : 09.11 - 10.41
ராகுகாலம் : 04.41 - 06.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைப்பு

# ம.உ.ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளர் நேரில் ஆராய்வு

வவுனியா, ஏப். 1



வவுனியா வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டதை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர்.பிரியதர்சன நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைத்து எறியப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதற்கமையவே மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர். பிரியதர்சன நேரில் சென்று பார்வையிட்டார்.

வெடுக்குநாறிமலைக்குச் செல்வதற்கு முன்னர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தகவல் அறிந்து கொண்டே வெடுக்குநாறிமலைக்குச் சென்று ஆலயச் சூழல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அதன்பின்னர் வெடுக்குநாறிமலை ஆலயம் உடைத்து எறியப்பட்டது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-14-19)

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 03 . 1941

இறப்பு 31 . 03 . 2023

### கதிர்காமு குலமணி

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு குலமணி நேற்று (31.03.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பன் - சுந்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான நாகன் - சின்னம் தம்பதியரின் அன்பு மருமகளும், கனகமணி சின்னத்துரை, ராசய்யா, சின்ராசு, குமாரவேலு, குணரத்தினம் வீரசிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூபாலன், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவரத்தினராசா, தவமலர், காலஞ்சென்ற கிருஷ்ணராஜா, இந்திராணி, சாந்திவரதராணி குலசேகரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரத்தினதேவி, குணரத்தினராசா, குணரத்தினம், கதிரேசு, ரேணுகாதேவி ஆகியோரின் மாமியாரும், மயூரன், அபிராமி, மகிந்தன், ரேகா, செந்தூரன், சத்தியா, கிருபாகரன், சதீஸ்வரன், கிரிராஜ், பிரியா, குணசர்மிளா, டினேஸ், பிறேமிலா, டிலானி, சுறேந்தினி, றேவதி, கபில்ராஜ் ஆகியோரின் பேர்த்தியாரும், லியானி, லியானியா, யதுர்ஷிகா, வைஷ்ணவி, பவதாரணி, ரதீசன், தனுசியா, தேனுயா, லக்ஷிகன், தட்சா, ஹறிப்பிரசாந், சாதனா, தனுஸ்கா, மிதிலா, டஸ்வின், சகிஷ்ணா, டஸ்வினி, பிருத்திகா, தருணிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வைத்தீஸ்வரா வீதி,**
**உரும்பிராய் மேற்கு.**
**0770099576.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs49798) (N-1)

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 04 . 1933

இறப்பு 30 . 03 . 2023

### மனவற்பிள்ளை றிச்சர்ட் அரசக்கோன்

**(முன்னாள் யாழ். மாநகரசபை நீர்ப்பாசன உத்தியோகத்தர்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட M.R.அரசக்கோன் அவர்கள் கடந்த (30.03.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனவற்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் (மணி) அன்புக் கணவரும், டெறிக் சாந்தகுமார் (கனடா), றொசான் பிறேம்குமார் (கொலண்ட்), சிறானி (பிரான்ஸ்), சிறாந்தி, சியாமளா (சுவிஸ்), ஷாமினி (சுவிஸ்), செறின் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிறேசியான் (சுவிஸ்), பிறேமதாசன் (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்), அருந்ததி (கனடா), அனிற்றா (கொலண்ட்) ஆகியோரின் மாமனாரும், ஜிலோஜன், ஜிலோணி, டினுஸ், டினுஷா, ஸ்ரெபின், ஸ்ரெபானி (சுவிஸ்), சகி, ஆன் (கனடா), றியோடன், அட்றிஜா (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (01.04.2023) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித யுவானியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.52/20, இராசாவின் தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 9128**

(CS 2221)

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 01 . 1935

மறைவு 31 . 03 . 2023

### கந்தையா பாலசிங்கம்

உரும்பிராய் தெற்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் கந்தையா பாலசிங்கம் நேற்று (31.03.2023) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பாக்கியம் தம்பதியரின் அன்பு புதல்வரும், மயில்வாகனம் திரவியம் தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மலர்சோதி, ஜெகசோதி, தங்கராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசதுரை மற்றும் ரவீந்திரராசா (அவுஸ்திரேலியா), பவளம் (கனடா) ஆகியோரின் அன்பு அண்ணனும், காலஞ்சென்ற குமாரலிங்கம், மகாலிங்கம் மற்றும் கனகலிங்கம் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், திருவருட்செல்வி (ஜேர்மனி), ஜெயராசசிங்கம் (லண்டன்), ஜெயபாலன், ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரன் (ஜேர்மனி), சுரோஜினி (லண்டன்), நளாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபிகா, அபிராமி, கஸ்தூரி, நிதுசன், நிரூபன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வீதி, உரும்பிராய்**
**தெற்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 1915 207**

(CR 39581) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமாணி கற்கைநெறி விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.1

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞானமாணி கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரத்தில் இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்றில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் https://ou.ac.lk/nsc/ என்ற இணையத்தளத்துக்கு அல்லது யாழ்.பிராந்திய நிலையத்தின் 0212223374 என்ற அலைபேசியினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கமுடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-14)


விண்ணக வாழ்வின் 13ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 18 . 03 . 1937

இறப்பு 01 . 04 . 2010

திருமதி மேரி யோசவின் பாக்கியநாதர்

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா.27.4)

"மரியன்ஸ"
கல்லூரி வீதி, மானிப்பாய்.
077 635 9240

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(CS/24203)AH-1

விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி



பிறப்பு 12.05.1931 இறப்பு 12.04.2022

அமரர் முருகேசு வேலாயுதன் (JP)

(முன்னாள் மின்சாரசபை உத்தியோகத்தர்)

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் மதிய போசன நிகழ்வும் இன்று (01.04.2023) உரும்பிராயில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகை தந்து மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"உதயம்"
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
நந்தகுமார் - 0033 6177 66468
நரேஸ்குமார் - 0014 1650 53141
செல்வகுமார் - 0044 7511 239917
தவச்செல்வி - 0033 6989 7677
சிவப்பிரகாசம் - 077 885 1826
குணநேசன் - 077 798 9550

(cs.) (N-1)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
பொது அறிவித்தல்.

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் அச்சுவேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு 5% மாக அறவிடப்பட்டு வந்த ஆதன வரியானது 01.04.2023ஆம் திகதி முதல் 9% ஆக அதிகரிக்கப்படுகின்றது. இவ் அறவீடானது 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் பிரிவு 134.144 இற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
புத்தூர்.
01.04.2023

(CR39580)(J-1)

மரண அறிவித்தல்



கதிரவேலு சிவபாதலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபரும், கல்வித்திணைக்கள அதிகாரியும், சித்த வைத்திய நிபுணரும்)

வேலணையைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவபாதலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபரும், கல்வித்திணைக்கள அதிகாரியும், சித்த வைத்திய நிபுணரும்) கடந்த (29.03.2023) புதன்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு கதிரவேலு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுண்டிக்குளி வைத்திலிங்கம் - அன்னபூரணி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற விஷகடி வைத்தியர்களான அனுசம்மா (வேலணை), தியாகராஜா (நாரந்தனை), சிற்றம்பலம் (கொட்டடி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மலோஜனியின் அன்புக் கணவரும், சசிகலா (B.Eng, M.BA), ரவிசங்கர் (B.Eng, M.Sc, UK), விஜிதா (B.Sc), Dr. ஜெயசங்கர் (UK), Dr. சிவவாகீசர் (UK), சுகிர்தா (B.Sc) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரசேகரம், மகேந்திரராஜா, சுஜாதா, சோபிதா, Dr. காயத்திரி, சிறீசங்கர் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சாயாதேவி மற்றும் வசந்தாதேவி (கனடா), சற்குருநாதன் (கொட்டடி விஷகடி வைத்தியர்) ஆகியோரின் தாய் மாமனாரும், காலஞ்சென்றவர்களான விமலாதேவி, சற்குணதேவி, தில்லைச்சிவன் மற்றும் விஜயகாந்தன், புஸ்பரதி, சிவசக்தி, சிவக்குமார், கதிரவேல், சிவானி, சிவநாதன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சௌமி, சாகித்தி, சிம்நிதி, Dr.. ஈஸ்வின், ஜயினி, நிருஷன், Dr..பீஷ்மன், சஜேஷ், தஷ்பிதா, ஹறினி, மிருதினி, லக்ஷா, திரிஷா, மேஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.04.2023) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிமுதல் அஞ்சலிக்காக அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து 10.00 மணிவரை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/2, விதானையார் வீதி,
பாண்டியன் தாழ்வு,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்
0094779828872

(CS 49805)(AK - 1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாடகைக்கு விடப்படும்

அச்சுவேலி நவக்கிரியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகளையுடைய புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகொள்ளும் நேரம் : இரவு 8.00 மணிக்குப்பிறகு

(ss.24104) (N-1)

021 223 2976


# எமது வியூகங்களால் மொட்டுக்கட்சி வீழாது

மொட்டுக் கட்சியின் வியூகங்களை எந்தக் கட்சியாலும் முறியடிக்க முடியாது. மொட்டுக்கட்சி இன்னமும் பெரும்பான்மையை இழக்கவில்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரமுனவே ஆட்சியமைக்கும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது குறுக்குவழியில் ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். அவர்களின் அந்த முயற்சி பயனற்றது. சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை எமது கட்சிக்கு உண்டு. மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிரணிப் பக்கம் சென்றாலும் நாடாளுமன்றத்தில் தற்போது மொட்டுக் கட்சி பெரும்பான்மையை இழக்கவில்லை. - என்றார். (ச-22)


## INVITATION FOR BID 2023/05
## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES (NP) JAFFNA

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2023 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.

02. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

03. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

*"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

05. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents Works specified in Table below

06. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09:00 hrs to 15:00 hrs.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna (T.P:021 222 1815, Fax:021 222 9991) from 9:00 hrs to 15:00 hrs. during the period from 2023.04.03 to 2023.04.21 upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

08. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna on or before 10.30 a.m at 2023.04.24. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

09. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, NP, Jaffna commencing at 2.30 P.M on 2023.04.17

10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables

| Category 1 | Document Issuing/Purchasing Period | | | From 2023-04-03 until 2023-04-21 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2023-04-17 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2023.04.24 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/40 | Construction of Vehicle & Motor Bike Park at Health Village Pannai,Jaffna.. | 5.53 | 108 Days | C8, C7 and C6 (Buildings) | 5,000.00 | 56,000.00 | Till 2023.08.07 |

| Category 11 | Document Issuing/Purchasing Period | | | From 2023-04-03 until 2023-04-21 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2023-04-17 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2023.04.24 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| NP/04/41/2023/PSSP/W/41 | Extension & Renovation of Dialysis Unit-Base Hospital Tellippalai,Jaffna. | 1.62 | 76 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 16,500.00 | Till 2023.07.10 |
| NP/04/41/2023/PSSP/W/42 | Renovation of Wash room and Toilet For Ward No 5,BH Tellippalai,Jaffna | 1.74 | 77 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 2023.07.10 |
| NP/04/41/2023/PSSP/W/43 | Doctor's Quarters at Base Hospital,Tellippalai,Jaffna | 1.72 | 77 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 2023.07.10 |
| NP/04/41/2023/PSSP/W/44 | Roof Renovation and Ceiling Works of Operation Theatre at Base Hospital Tellippalai,Jaffna. | 0.15 | 17 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 2023.07.10 |
| NP/04/41/2023/PSSP/W/45 | Repair and Renovation of Ward No.01 at Base Hospital Chavakachcheri,Jaffna. | 1.21 | 72Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 2023.07.10 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Services, NP,**
**No.572/3, Hospital Road, Jaffna.**

(CR 39579)(K-1)


# யோகர் சுவாமிகள் 59ஆவது குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் 59ஆவது குருபூசை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் செ.பாலசந்திரன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ஒ-14)

யாழ்ப்பாணம், ஏப். 1

யோகர் சுவாமிகளின் 59ஆவது குருபூசை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

கொழும்புத்துறையில் அமைந்துள்ள தவத்திரு.யோகர் சுவாமிகளின் சமாதிக் கோயிலில் காலை 8 மணி முதல் கூட்டு நற்சிந்தனைப் பாராயணம் ஆரம்பமாகி இடம்பெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு சமாதிக் கோயில் மூலஸ்தானத்தில் அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ஒ-14-66)


அருட்தந்தை அஜந்தன் அவர்களின் எழுத்துருவாக்கத்தில்....

நாரந்தனைப் பங்கு தயாரித்து வழங்கும்

'சித்தம் செய்த இரத்தம்'

தவக்கால ஆற்றுகை

இடம் : நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலயம்
காலம் : இன்று 01.04.2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 6.45 மணி



அனுசரணை: உள்நாட்டு, வெளிநாட்டு நாரந்தனைப் பங்கு மக்கள் மற்றும் நாரந்தனை நல்வாழ்வுச் சங்கம் -(பிரான்ஸ்)

இயேசுவின் கல்வாரிக் குருதியின் ஈரத்தில் நனைந்திட அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்

மேடை அமைப்பு, மேடை அலங்காரம், ஒலி, ஒளி - சாள்ஸ் மீசாலை.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திறப்பு 28 . 02 . 1948

இறப்பு 24 . 03 . 2021

**சிவஞானசுந்தரம் சறோஜினிதேவி**

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
எம் ஊரோடும் உணர்வோடும் ஒன்றாய் கலந்த உத்தமியே
வேருடே நீர் சுமந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்
வேண்டுவன எல்லாமே வேண்டாமலே விரும்பி ஈந்தீர்
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
நீராடும் கண்களுடன் நிதமும்மைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ நிம்மதியைத் தாராயோ.....

பிரிவால் துயருறும்....

(22945)AH-1

உண்டுவத்தை, அல்வாய் தெற்கு.

குடும்பத்தினர்
மகன் - சுகந்தன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முட்டாள்கள் தினத்தில் கொண்டாடப்படும் பிறந்தநாள்

ஞா.த்ரிஷா




உலகளவில் பெருமையாக போற்றி புகழும் ஒவ்வொரு விடயத்தையும் கொண்டாடும் வகையில் மகளிர் தினம், நண்பர்கள் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், சிறுவர் தினம், தொழிலாளர்கள் தினம் என மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கு என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதைப் போல இத் தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாக சொல்லிக்கொள்ள எவரும் முன்வருவதில்லை. அதேநேரம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் 'முட்டாள்தனமான அறிவாளிகளின் தினம்' என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. வீட்டில் உள்ளவர்களிடம் அன்று ஏமாறாமல் இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்ட நாள்களை மறக்கமுடியாது. அதேபோல ஒருவரையாவது ஏமாற்றிவிடவேண்டும் என்ற விளையாட்டுத்தனமும் அதில் இருந்த ஆர்வமும் யாராலும் மறக்கமுடியாது.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இன்றைய தினம், எப்படி உருவானது? அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. 1446ஆம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது. இது போன்ற பல்வேறு புராண கருத்துக்களும் கதைகளும் இத் தினத்துக்கு உரியதாக இருக்கின்றது. ஏப்ரல் முதலாம் திகதி சர்வதேச 'மீன்கள்' தினமாக பிரான்ஸில் முதல் முதலில் கொண்டாடப்பட்டது. ஆனால் இத் தினத்தை எவரும் கருத்தில் கொள்வதில்லை. ஒரே நாளில் இரு தினங்கள் இருக்கின்றன. ஆனால் மக்களால் அதிகம் ஈர்க்கப்பட்டு பேசப்பட்டு வருவது இவ் முட்டாள் தினமேயாகும். உலகின் முட்டாள் என்பதற்கான சரியான விளக்கம் என்ன? யார் முட்டாள்? முட்டாள்களின் குணம் என்ன? தெளிவானவர்கள் யார்? இது போன்ற கேள்விகளை எழுப்பும் போது அதற்கான சரியான விடையைத் தேடிக் கொள்வது சற்றுக் கடினமாகவே உள்ளது. ஆறறிவு இருந்தும் சிறு சிறு விடயங்களுக்கு ஏமாந்து தன் வாழ்க்கையில் பின்னடையும் அறிவாளிகளை முட்டாள்கள் எனவும் போதிய கற்றல் அறிவு இல்லாவிட்டாலும் சிந்தித்துச் செயற்படும் ஏமாறாதவர்களை அறிவுள்ளோர் என்றும் கூறலாம்.

இக் காலகட்டத்தில் உலகில் இருக்கும் மிகச் சிறந்த முட்டாள்களாக விளங்கும் கல்வி கற்றும் பட்டங்கள் பல தன்வசம் கொண்டு, கற்காவிட்டாலும் அனுபவ கல்வியில் தன் வாழ்வை நடத்தும் ஆறறிவு கொண்ட இன்னமும் சிகரெட் குடிக்கும் அறிவுள்ள முட்டாள்களுக்காக இத் தினத்தை சமர்ப்பிக்கலாம்.

சிகரெட்டுக்கு ஏமாந்து இன்னமும் புகைப்பவர்கள் இவ் நவீன யுகத்திலும் கூறும் சில விடயங்கள் 'சிகரெட் குடித்தால் தான் நித்திரை கொள்ள முடியும், மலசலக்கூடம் சென்றால் சிகரெட் குடித்தால் தான் மலம் கழிக்க முடியும், கவலையை போக்கவும் மன அமைதிக்கும் சிகரெட் புகைக்க வேண்டும், சிகரெட் புகைத்தால் நன்றாக சிந்திக்கவும் செயற்படவும் முடியும்' போன்ற முட்டாள் தனமான கருத்துக்களைப் பகிர்வது மட்டும் அல்லது இளம் சந்ததியினருக்கும் பரப்பி வருகின்றனர். அதுமட்டும் அல்லாது சிகரெட் குடித்த பின் யாரும் விரும்பி அருகே செல்ல முடியாதவாறான வாய் நாற்றக்காரர்களாகவும் கண்கள் சிவந்து, கன்னங்களில் குழி விழுந்து தன் வயதை விட முதிர்ந்த தோற்றத்தை உடையவர்களாக மாறுகின்றனர். அவர்களின் மாற்றத்தை அவர்களே அறிய முடியாத கோமாளிகள் ஆகின்றனர். இவ்வாறான மாற்றம் மட்டுமா நிகழ்கின்றது என்று சிந்தித்து பார்த்தால் எதிர்காலத்துக்கு மிக முக்கியமான ஓர் விடயம் தான் தன் சந்ததியைப் உருவாக்கக்கூடிய ஆண்மை, அவ் ஆண்மையிலும் குறைப்பாடு ஏற்படுகின்றது.

இவ்வாறான மறுக்க முடியாத உண்மைகளை அறிந்திருந்தும் இதுவரை காலமும் ஆறறிவு இருந்தும் சிகரெட்டுக்கு ஏமாந்து புகைப்பவர்களுக்கு ஓர் சுவாரசியமான அம்சம் தான் ஏப்ரல் 1ஆம் திகதி, ஏன் என்றால் அன்று தான் சிகரெட் புகைப்பவர்கள் பிறந்திருக்கின்றனர் என்று கூறுவதோடு ஏமாந்த முட்டாள்களுடன் இணைத்து 'சிகரெட் புகைத்தால் தான் மகிழ்ச்சி ஏற்படும், சிந்திக்கலாம், மலம் கழிக்கலாம் என்று நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும்' இருக்கும் முட்டாள்களுக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

'சிகரெட் முட்டாள்களின் அடையாளம்' என்ற சிறந்த வாழ்த்து வசனமானது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும். சிகரெட்டுக்கு ஏமாந்து குடிக்கும் ஏமாளிகளுக்கு என்னைப் போல நீங்களும் 'இனிய பிறந்தநாள்' வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்.

---

**யோகர் சுவாமிகளது 59ஆவது குருபூசைதினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# யோகர் சுவாமிகள் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்!

இன்று ஈழநாட்டில் எங்கள் குருநாதன்' என்று யாரும் பேசத் தொடங்குவாராயின் உடனே 'எங்கள் குருநாதன்' என்னும் ஒப்புயர்வற்ற குரு வணக்கப் பாசுரத்தை எமக்களித்த யோகர் சுவாமிகளின் ஞாபகமே எங்கள் எல்லார் உள்ளங்களிலும் உதிக்கும். சுவாமிகள் சமயாதீதப் பரம்பொருளானவர். எம்மார்க்கத்தினரும் அவர்களைத் தம்மார்க்கத்தவர் என்று ஏற்றுக் கொள்ளத்தக்க மார்க்கங் கடந்த குணாதீதரேயாவர். அவர்கள் தங்கள் குருநாதனாகிய செல்லப்பாச் சுவாமிகளைப் பற்றிப் படிக்கும் போது,

குருசீடம் முறையொன்றும் கொள்ளான் செல்வன்
குணாதீதன் ஒருவரையும் கும்பிட்டு நில்லான்.

என்று விவரித்ததையே யாமும் எங்கள் குருநாதனின் தன்மையை விளக்கிக்காட்டக் கூறுவோம். உண்மைக் குருவானவன் உயர்ந்த அநுபூதிமானாகும். உயர்ந்த அநுபூதிச் செல்வர், தாம் குருவென்றும் வேறுசிலர் சீடரென்றும் உலகில் எவரையும் வேறுபிரித்துப் பாரார். அவர்களுக்குப் பார்ப்பதெல்லாம் பரமாகவே இருக்கும். தமக்கு அந்நியமாக வேறொன்றையும் அறியார். அப்படியானவர்கள் சிலரை அஞ்ஞானிகள் என்றும் தம்மை அவர்களுக்குப் போதனை செய்யும் குருமார் என்றும் எஞ்ஞான்றும் எண்ணார். அநுபூதிச் செல்வரின் இலக்கணங்களுள் இது மிகவும் சிறந்த வொன்றாகும். எங்கள் குருநாதனைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்களுக்கு ஞாபகப்படுத்தும் போதனைகளுள், நானே நீ! நீயே நான்!! உனக்கும் எனக்கும் ஒரு வித்தியாசமுமில்லை. உன்னைப்போலவே யான் இருக்கின்றேன்.

உனக்கு இரண்டு கண்கள், எனக்கும் இரண்டு கண்கள் உனக்கு இரண்டு கைகள், எனக்கும் இரண்டு கைகள் என்பன அடிக்கடி கூறப்பட்டுள்ளன என்பதனை யாவருமறிவர். சால அன்புடன் சென்று வணங்குவார்க்குச் சுவாமிகள் 'நீயும் நானும் ஒன்றாச்சு நித்தியானந்தம் வாச்சுப்போச்சு' 'என்று கூறி மகிழ்வார்கள்.

✦✦✦✦

உலகின்கண் குருமார் பல்வகைப்படுவர். எல்லாவகையினரைப்பற்றியும் யாம் ஈண்டு விரிக்கவில்லை! எடுத்துக் கொண்ட எமது பொருளுக்கேற்றவற்றை மட்டுமே காண்போம். எல்லா வகையான குருமாருள்ளும் ஞானகுருவே சிறந்த வகையினர். அநுபூதி பெற்ற அருட்செல்வர்களே ஞானிகளாவர். ஏனையோர் சமயகுரு, வித்தியாகுரு, கிரியா குருவெனப்படும் பிரிவுகளுள் அடங்குவர். ஞான குருவிலும் அதிட்டிதகுரு, ஆவேசகுரு என இரு பெரும் வகையினர் உளர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் போன்றவர்கள் அதிட்டித குருமார் ஆவார். திருப்பெருந்துறையில் குருந்தைமரத்தடியில் திருவாதவூரரை ஆட்கொள்ள வெளிவந்த இறைவன் திருக்கோலமே ஆவேசகுருவாம். இறைவன் நால்வரையும் அதிட்டித்து நின்று ஞானமளித்தனர். அவர்களை ஆட்கொண்டு அதிட்டிப்பதற்கு முன்னர் அவர்கள் நம்மவரேயாவர் என்று இறைவன் தன் திருக்கோலங்காட்டி அவர்களை யாட்கொண்டானோ அன்றே அவர்கள் இறைமனிதர் ஆனார்கள். அவ்வாறு 'மானும் மழுவுங் கரந்து மண்மிசை காணும் படி வந்த' செல்லப்பா சுவாமிகளை என்று எங்கள் குருநாதன் அருந்தவர் வாழ் நல்லூர்த் தேரடியிற் தரிசித்தாரோ அன்றே அவர் பேசாதனவெல்லாம் பேசினார். எதற்கும் கூசாது நின்ற சிங்கக்குட்டியைப் பார்த்து, 'நீ யார்! எடா!' என்று அவர் அதட்டினார். அப்பொழுதே இவர் அவருக்கு ஆட்பட்டு விட்டார். குருவாகிய சிங்கத்தின் கண்ணிற்பட்ட எவரும் தப்பிப்போகமாட்டார்களல்லவா? மேல்வரும் திருப்பாடல்களால் தம்மையவர் ஆட்கொண்ட வரலாற்றைக் கூறுகின்றார்:

அருளொளிக்குள் ளேபுகுந்து சென்றேன்யான் ஆங்கே
இருள்சூழ்ந் திருப்பதைக் கண்டேன் பொருளறியேன்
ஓர் பொல்லாப் பில்லையென வோதினான் கேட்டுநின்றேன்
மர்மந்தே ராது மலைத்து.

மலைத்து நின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாலை அகலத் தலைத்தலத்தற்
கைகொடிச் சொல்லுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம்மறந்து நின்றேன் வியந்து

வியந்து நின்ற என்றனக்கு வேதாந்த உண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் நயந்துகொள்
அப்படியே உள்ளதுகாண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று

உற்றாரும் போனார் உடன் பிறந்தார் தாம்போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில் மற்றாரும்
தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பார் இன்றியிருந்தேன்.

ஞானோதய தினமே அஞ்ஞானவஸ்தமன தினமுமாகும். எனவே யாம் குருநாதன் என்று ஏத்தி வழிபடும் யோகர் சுவாமிகள் என்று பிறந்தார் என்பது இப்போது யாவரும் அறிவர். அவருக்கு அன்னையும் தந்தையும் அவர் குருவேயாவர். அவரோ மானும் மழுவுங் கரந்து மண்மிசை யாரும் காணவந்த மாதவச் செல்லப்பர் ஆகும்.

✦✦✦✦

அதிட்டித குருவானவர் சிவமேயாவர். குருவே சிவமெனக் கூறினன் நந்தி. அருட்குருவான அவருக்குச் சாதியேது? சமயமேது? அவருக்கு யாதுமூரே ஆகும், யாவரும் கேளிரே ஆவர். 'சிவமானவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ' என்கிறார் மணிவாசகர். குருவாக ஆட்கொள்ளப் படுவதற்கு முன் அவரின் பிறந்த இடம், பெற்றோர், வயது, மதம், சாதி எல்லாம் யாருக்குத் தேவை? வரலாற்றாசிரியர்க்கே அவை தேவைப்படும். சாதகர்க்கும் அன்பர்க்கும் அடியார்க்கும் இவ்விவரங்கள் தேவைப்படுமா? அவ்விதம் தேவைப்படுமெனக் கண்டால் அருளே உருவாகக் காசினியில் திகழ்ந்த இவர்களே யாவையும் விளம்பியிருப்பார்களன்றோ? அவர்கள் திருவார்த்தைகளே அவர்கள் பிற்சந்ததியார்க்கு விட்டுச்சென்ற செல்வமாகும். அ[illegible] செல்வத்தில் அழுந்தி ஆன்ம ஈடேற்றம் பெறுதலே [illegible]ரும் அவர்களுக்குச் செய்யும் நன்றியாகும்.

சிவதொண்டன் சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவிஞர் கதிரேசர்பிள்ளையின் நூற்றாண்டு நிகழ்வு நாளை!

யாழ்ப்பாணம், ஏப். 1

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கவி ஞருமான அமரர் செ.கதிரேசர்பிள்ளையின் நூற் றாண்டு நிகழ்வுகளும், 'கதிரேசர் கவிதைகள்' நூல் வெளியீடும் மகாஜனக் கல்லூரியின் பாவலர் துரை யப்பாபிள்ளை மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மகாஜனக் கல்லூரியின் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வாழ்த்து ரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன், வலிகாமம் கல்விவலய முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டுரையை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன், வலிகாமம் கல்விவலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம் ஆகியோர் நிழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையையும் நன்றியுரையையும் அருணோதயக் கல்லூரி ஆசிரியரும், நூலின் பதிப்பாசிரியருமான சி.ரமேஷ் நிகழ்த்தவுள்ளார். (அ-ம)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் நல்லைக் குருமணியின் 40ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை நிகழ்வு, ஆதீன சமாதியில் எழுந்தருளி உள்ள பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி சந்நிதானத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ஒ-14-66)

# 'கிளாசிக்' சுப்மன் கில் குஜராத் அணி வெற்றி!

புதுடில்லி, ஏப்ரல் 1

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில், சென்னை சுப்பர் கிங்ஸைத் தோற்கடித்தது குஜராத் ரைட்டன்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. சென்னை அணியின் ஆரம்ப வீரர்களாக கொன்வே மற்றும் ஹெய்க்வாட் இருவரும் களமிறங்கினார்கள். கொன்வே சிறிது தடுமாறவே செய்தார். எனினும், மறுமுனையில் நிதானமும் அதிரடியும் இணைந்தாற்போல் 'கிளாசிக் இன்னிங்ஸ்' ஒன்றை ஆடிக்கொண்டிருந்தார் ஹெய்க்வாட். மொய்ன் அலியும் தன் பங்குக்கு 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியைப் பலப்படுத்தினார். ஸ்ரோக்ஸ் பிரகாசிக்கவில்லை. அவர் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் களமிறங்கிய அம்பதி ரைடு, சிவம் துபே இருவரும் அணிக்குப் பின்னடைவை வழங்கினார்கள். அவர்கள் நீண்டநேரம் தாக்குப்பிடித்தபோதிலும் ரி-20 ஆட்டங்களின் பாணியில் ஆடவில்லை. 12 பந்துகளில் 12 ஓட்டங்களுடன் ரைடுவும், 18 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் துபேயும் ஆட்டமிழந்தனர். 50 பந்துகளில் 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹெய்க்வாட். ஜடேஜா முழுவதுமாக ஏமாற்றினார். அவர் ஒரேயொரு ஓட்டத்தையே பெற்றார். டோனி நேற்றுப் 'பழைய பாட்ஷாவாக' பரிணமித்தார். அவர் 7 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற முடிவில் 7 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ். பந்துவீச்சில் ரசிட்கான், அல்சாரி ஜோசப், முகமட் சமி மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணிக்கு ஆரம்ப வீரர் சகா அதிரடியாக விளையாடி சிறந்த அத்திபாரத்தை அமைத்துக்கொடுத்தார். அவர் 16 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். கேன் வில்லியம்சன் காயமடைந்ததால் மாற்று வீரராகக் களமிறங்கிய சாய் சுதர்சன் நம்பிக்கையான ஆட்டத்தை எதிர்முனை வீரர் கில்லுடன் இணைந்து வழங்கினார். இதையடுத்து சென்னையின் வெற்றி கேள்விக்குட்பட்டது. கில் 63 ஓட்டங்களுடனும், சாய் சுதர்சன் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பாண்டியா வெறும் ஓட்டங்களில் ஜடேஜாவால் போல்ட் செய்யப்பட்டார். எனினும் தமிழக வீரரான விஜய் சங்கரின் நிதானத்தாலும், ரசிட் கானின் கடைசிக்கட்ட அதிரடியாலும் சென்னை சுப்பர் கிங்ஸை தோற்கடித்து வெற்றிபெற்றது குஜராத் ரைட்டன்ஸ். (ம)



சூகுளுடைய...

வீழ்ச்சிகண்டு, அடுத்த ஒரு மணிநேரத்தில் மீண்டும் ஏற்றம் பெற்றது. இதனால் பங்குச்சந்தையில் நேற்று இரவு பெரும் தளம்பலும் குழப்பமும் ஏற்பட்டது.

ஒரு டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று மாலை வரை 330 என்றவாறாக இருந்தது. எனினும் இரவு 7 மணி யளவில் ரூபாவின் பெறுமதி சடுதியாக உயர்ந்து டொலரின் பெறுமதி பெருவீழ்ச்சி கண்டது. 94 ரூபா வரை டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து ஒரு டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 236 என்றவாறாக வந்தது. எனினும் அடுத்த 10 நிமிடங்களுக்குள்ளாக டொலரின் பெறுமதி மீண்டும் அதி கரித்து 330 என்ற நிலையை அடைந்தது.

சூகுள் நிறுவனத்தின் தரவு மாற்றத்தில் ஏற்பட்ட தவறுதான் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், இதுவரை இலங்கை ரூபா விடயத்தில் இவ்வாறான பெரும் தரவுத் தவறு நிகழவில்லை என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். இந்தத் தரவுத் தவறால் பங்குச்சந்தையில் நேற்றுப் பெரும் மாற்றங்களும் தளம்பல் நிலையும் ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-ம)


நெஞ்சம்மறவா நினைவுகளுடன்

27ஆம் ஆண்டு

இவ்வுலகில் 19.06.1942



இறையுலகில் 25.03.1996

அமரர் முருகேசு பாலசிங்கம்

21ஆம் ஆண்டு

இவ்வுலகில் 15.10.1944



இறையுலகில் 18.11.2002

அமரர் முருகேசு குணநாயகம் (M.G.M)

சந்தம்புளியடி – காரைநகர்

எங்கள் நினைவுகளில் வலம் வரும் உங்களை எப்படி மறப்பது – பங்குனித் திங்களில் அம்மன் பதம் சேர்ந்தீர்கள் அப்பா!
உங்களின் அன்பும் அரவணைப்புமே எங்கள் வாழ்வின் மகத்துவம்
[illegible] காலடியில் வாழும் உங்களுக்கு எங்களின் அஞ்சலிகள்

பலாலி வீதி, திருநெல்வேலி. (CS/24205)AH-1) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கொழும்பில் நேற்று ஒன்றுகூடி இந்தப் புதிய சட்டவரைவு தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
'தனிமனிதச்சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், போராடும் சுதந்திரம் என எல்லாவற்றுக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு அச்சுறுத்தலாகவுள்ளது. அதற்கு எதிராக அனைவரும் அணிதிரளவேண்டும். குறித்த சட்டவரைவை நிறைவேற்ற இடமளிக்கப்படமாட்டாது. இதற்கான முதல் வேட்டு 3ஆம் திகதி கொளுத்தப்படும்' - என்றனர். (அ-ம-44)

## விபத்தில்...

விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். செல்லத்துரை சிவஞானம் (வயது-85) என்பவரே உயிரிழந்தவராவார்.
துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த முதியவரை பின்னால் வந்த காரொன்று மோதியதிலேயே இந்த விபத்துசம்பவித்துள்ளது. படுகாயமடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஏப்ரல் 10...

டுள்ளது. வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 28 ஆம் திகதி இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது, ஆலய நிர்வாகத்தினரின் தொலைபேசி அழைப்புக்களைப் பெறுவதற்கு நெடுங்கேணிப் பொலிஸார் அனுமதி கோரினார்கள். இதற்கு சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன், விக்கிரகங்களை உடைத்தமை தொடர்பில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளைமேற்கொண்டு குற்றவாளிகள் கைது செய்யப்படவேண்டும் எனவும், அதற்கு மன்று உத்தரவிட வேண்டும் எனவும் கோரினர். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்று, வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு மார்ச் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.
இதனடிப்படையில், இந்த விடயம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, ஆலய உடைப்புத் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனஎன்றுதெரிவித்தபொலிஸார், தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான விசாரணைகளுக்கும் அனுமதி கோரினர். இதை ஏற்ற நீதிமன்றம் அதற்கு அனுமதிவழங்கியதுடன், வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் தினமாக ஏப்ரல் மாதம் 10ஆம் திகதியைத் தவணையிட்டுள்ளது. (அ-ம-18,110)

## கட்டம்...

முகாமைத்துவம் செய்து, கட்டம் கட்டமாகவேனும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் தற்போதுள்ள நிலைமைக்கமைய ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தலை நடத்த முடியாது. உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாமையானது குற்றமாகும் என்பதோடு, கவலைக்குரியதுமாகும். இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். தேர்தல் ஆணைக்குழு, நிதி அமைச்சு மற்றும் திறைசேரி என்பவற்றுக்கே இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இயலுமை காணப்படுகிறது. மாறாக வேறு எவராலும் இதற்கான தீர்வை வழங்க முடியாது.
நிதியைச் சேகரித்து தேர்தலை நடத்த முடியாதெனில், கட்டம் கட்டமாகவேனும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இன்று நாட்டில் சகல மாவட்டங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். மாகாணசபைகளும் இல்லை உள்ளூராட்சி சபைகளும் இல்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இல்லை என்பது முக்கியமான பிரச்சினையாகும். மாகாணசபை ஆளுநர்கள் மற்றும் செயலாளர்களே இவற்றை ஆட்சி செய்கின்றனர். இந்த நிலைமையை விரைவில் மாற்றுவதற்காக அரசாங்கம், நாடாளுமன்றம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பன இணைந்து செயற்படவேண்டியது மிகமிக அவசியமானதாகும்.
தேர்தல் நடத்தப்படாமையால் பிரதிநிதித்துவ ஜனநாயகம் அற்றுப்போகும் அபாயம் உள்ளது. தேர்தல் இல்லை என்பது ஜனநாயகம் இல்லை என்பதையே குறிக்கிறது. எனவே குறைந்தபட்சம் ஓகஸ்ட்டில் உலக இளைஞர் தினத்துக்கு (ஓகஸ்ட் 12) முன்னதாக அல்லது செப்ரெம்பரில் உலக ஜனநாயக தினத்துக்கு (செப்ரெம்பர் 15) முன்னதாகவேனும் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார். (அ-ம)

## சங்கானையில்...

ளது. அந்தப் போராட்டத்தில் மக்கள் பெருமளவில் கலந்துகொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் அறைகூவல் விடுத்துள்ளார்.
இந்தப் போராட்டம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
குருதி சிந்திய போர் முடிவுக்கு வந்தாலும் இந்தத் தீவிலிருந்து தமிழர்களை துடைத்தெறியாமல் சிங்கள தேசம் ஓயாது. அது தனது கோரப்பற்களை இன்னமும் திறந்தே வைத்திருக்கின்றது. ஓர் இனத்தை அழிக்கவேண்டுமாயின் அதன் கலாசாரம், நிலம், பண்பாடு மீது கைவைக்கவேண்டும். பௌத்த - சிங்களப் பேரினவாதம் அண்மைக்காலமாக தமிழர் தாயகத்துக்கு எதிராக இந்தப் போரைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.
எமது இனவழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு யாரும் வரப்போவதில்லை. பல்லாயிரம் உயிர்கள் முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்டபோது வராத எந்தவொரு தரப்பும் இப்போதும் வரப்போவதில்லை. எமது மண்ணை எங்களின் இருப்பை பாதுகாக்கவேண்டுமானால் நாம்தான் போராடவேண்டும்.
வெடுக்குநாறியில் ஆதிலிங்கேஸ்வரரை அடித்துடைத்திருக்கிறார்கள், கன்னியா வெந்நீர் ஊற்றை ஆக்கிரமித்திருக்கிறார்கள், குருந்தூர் மலையில் விகாரையைக் கட்டி மகிழ்கிறார்கள், கச்சதீவில் புத்தனைக் குடியேற்றுகிறார்கள். இந்தப் பட்டியல் கடந்த ஒரு மாதத்தில் புத்தனின் சீடர்களால் அரங்கேற்றப்பட்ட அட்டூழியங்கள் மட்டுமே. இது இத்துடன் முடியப்போவதில்லை. எதிர்ப்புக்கள் பலமானால் மாத்திரமே அவர்களின் ஆக்கிரமிப்புக்கள் மெல்ல அடங்கும். அவர்களின் மொழியில் அவர்களுக்குச் சொன்னால் மாத்திரமே புரியும். நாம் அமைதியாகக் கடக்கும் ஒவ்வொரு நொடியும் எங்களின் தேசத்தை கறையான்போன்று பௌத்த - சிங்கள பேரினவாதம் அரித்துக்கொண்டேயிருக்கும்.
விழித்தெழுந்து போராடவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. இனவழிப்பை எதிர்த்து குரல்கொடுக்க ஒவ்வொருவரும் வரவேண்டியதன் அவசியத்தை காலம் உணர்த்திக் கொண்டிருக்கின்றது. எங்களின் பலவீனம்தான் எதிரியின் பலமாகிறது. நாங்கள் பலமானவர்களாக எங்கள் எதிர்ப்பை பதிவுசெய்ய இன்று சனிக்கிழமை அணிதிரளுங்கள் என்று அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-ம)

## சாரா...

உரிய விசாரணைகள்மூலம் வெளிக்கொணரமுடியும் என்று கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'சாரா தப்பியோட உதவினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரியொருவர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சம்பவத்தின் பின்னர் சாராவின் குரல் கேட்டதாக சஹ்ரானின் மனைவி, ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்துள்ளார். முதல் இரண்டு டி.என்.ஏ. பரிசோதனைகளிலும் சாரா உயிரிழக்கவில்லை எனக் கூறப்பட்டது. ஆனால், தற்போது திடீரென அவர் உயிரிழந்துவிட்டாரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதை நம்ப முடியவில்லை, இதன் நோக்கம் என்னவென்று புரியவில்லை.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸார் வரவழைக்கப்படும் என ஜனாதிபதி கூறினார். அது இன்னும் நடக்கவில்லை. எனக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்படுமானால் இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை முன்னெடுக்கப்படும். எனக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டால், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் பதவி விலகி, நான் நாடாளுமன்றம்வர வாய்ப்பளிப்பார்' - என்றார். (அ-ம-44)

## கரம்பகம்...

செய்யப்பட்டுள்ளனர்.
சிவசோதி சிவகுமார் (வயது -43) என்பவரே கொல்லப்பட்டவராவார். கரம்பகம் எல். ஆர். தோட்டத்தில் இருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டது. யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உபபொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே, இறந்தவரின் இரண்டு மகன்களும் அவர்களின் நண்பருமாக மூன்று பேர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 17 மற்றும் 19 வயதுடைய பாடசாலை மாணவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போது, 'தந்தையார் எம்முடன் மோசமான வகையில் முரண்பட்டு வந்ததால் அவரைக் கொன்றோம்' என்று வாக்குமூலம் வழங்கியுள்ளனரென பொலிஸார் தெரிவித்துள்ளனர். இறந்தவரின் மகன்களுடைய நண்பர், இந்தக் கொலைக்கு உறுதுணையாக இருந்துள்ளார். சம்பவ இடத்துக்கு அருகிலுள்ள குளமொன்றிலிருந்து கத்தியொன்று மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இறந்தவர், கடந்த இரண்டரை வருடங்களாக தனது மனைவியைப் பிரிந்து தோட்டக் குடிசையிலேயே தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார் என்றும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26,9,159,20)

## 10 வயதுச்...

யுடைய தாயின் இரண்டாவது கணவர், சிறுமியின் சகோதரன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சிறுமி தனக்கு வீட்டில் நடக்கும் கொடுமைகளை பாடசாலையில் தனது சக மாணவியொருவருக்குத் தெரியப்படுத்தி அழுதுள்ளார். இதையடுத்து சிறுமியின் நண்பி வகுப்பு ஆசிரியரிடம் விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். அந்த ஆசிரியர் சம்பந்தப்பட்ட மாணவியிடம் விடயத்தை அறிந்து அதுதொடர்பில் வவுனியா மாவட்டச் செயலகத்தின் சிறுவர் நன்நடத்தைப் பிரிவுக்கு அறிவித்துள்ளார். இதையடுத்து விடயம் வவுனியா பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய மூவரையும் கைது செய்துள்ளனர். சிறுமி வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-18,110)


JOB Vacancy
பதவி நிலை வெற்றிடம்
கல்வியை முடித்தவர்கட்கும் / துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்குமான தொழில் வாய்ப்புகள் கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உங்கள் அருகில்

- Marketting Executive - Male
- Marketting Manager - Male / Female
- Accountant - Male / Female
- Accountant Assistant - Male / Female
- Sales Manager (விற்பனை மேலாளர்) Male (Clinic and Pharmacy)
- Baby Item விற்பனையில் அனுபவம் உள்ள பெண்கள்.
- Nursing Assistant
- Cleaning Staff

(CS 49799)(K-1)

Kick Start your Career with our Institution
Sun Rise Mediclinic Yarl Baby Needs & Pharmacy
580, Hospital Road, Jaffna.
(ஆஸ்பத்திரி வீதியில் சிங்கர் கொம்பனிக்கும் இலங்கை வங்கிக்கும் இடையே)
T.P : 021 222 6069 / 021 222 8460
நேர்முகத் தேர்வு முற்பகல் 10.00 மணி 02.04.2023 (ஞாயிறு)
E-Mail Adderss : sunrisemediclinic@gmail.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### *100 மடங்கு...*

கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்களின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின்' ஏற்பாட்டாளரான கலாநிதி குணதாச அமரசேகர இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'1979ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் உள்ளது. புலிகளை ஒடுக்குவதே இதன் பிரதான நோக்கம். ஆனால், போர் முடிவடைந்த பின்னரும் அந்தச் சட்டம் அமுலில் இருக்கின்றது. அது நீக்கப்படவேண்டும் என பலரும் வலியுறுத்தினர். இந்த நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டமானது, இருந்ததைவிட 100 மடங்கு ஆபத்தானது. ஜனாதிபதிக்கு மன்னருக்குரிய அதிகாரங்களை வழங்கக்கூடியது. எனவே, கட்சி பேதமின்றி அனைவரும் அதனை எதிர்க்க வேண்டும்' - என்றார்.

(அ-ம-44)

### *12,700...*

கடற்படையால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடலட்டையைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படுவார்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

(அ-ம-213)

### *ஏப்ரல்...*

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். கல[illegible]டிக்கு நேற்று சென்றிருந்த பிரதமர் தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னரே சட்டம் நிறைவேற்றப்படும். ஏப்ரல் 4ஆம் திகதிக்குப் பிறகு ஏப்ரல் 3ஆவது வாரத்தில்தான் நாடாளுமன்றம்கூடும். இதன்போது மேற்படி சட்ட வரைவு நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படும்' - என்றார்.

(அ-ம-44)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிபிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814
076 7390 413

(CS 24222) A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200.000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047
076 333 6079
076 733 6093

(cs22599) (N.I)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (06.03.2023) அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

**அமரர் திருமதி**

**லோகேந்திரகுமார் மேரிஜெனிற்றா (சுசி)**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (02.04.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 05.04.2023 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.** **குடும்பத்தினர்**

## காணி விற்பனைக்கு

PointPedro Road கல்வியங்காடு 3ம் கட்டை லேனில் 200m தூரத்தில் 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 601 1135

(CS24220)(J-1)

## வேலையாள்கள் தேவை

கல்வியங்காடு பகுதியை அண்மித்த பழங்கள் விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.

077 137 1617

(CS/24204)AH-1

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 711 2412

(CS24202)AH-1

## காணி விற்பனைக்கு

ஏ 9 வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CR 39555)(K-1)

தொடர்பு : 076 256 3463

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 04.03.2023 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை நாகராசா**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**குடும்பத்தினர்.**
**மீசாலை வடக்கு, மீசாலை.**

(CS/38681)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்செழுப் பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 108 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

(CS24213)(J-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.